
# திராவிடத்தால் வாழ்கிறோம்

993

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

132




நாளிதழிலும் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வந்தார். 1957-ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் 'தென்றல்', 'முல்லை' 'இனமுழக்கம்' ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1962 , 63- ஆம் ஆண்டுகளில் குன்றக்குடி அடிகளார் தொடங்கிய 'தமிழ்', மற்றும் 'அறுவடை' ஆகிய மாத இதழ்களில் துணை ஆசிரியர் பொறுப்பேற்று, அந்த இதழ்கள் வெளிவரத் துணை நின்றார்.

திராவிட இயக்கக் கொள்கைகளைத் தாங்கி வரும் பத்திரிகைகளில் தினகரன் அவர்களின் எழுத்துகளைப் பாராட்டி வந்த, அன்றைய ஒருங் கிணைந்த ராமநாதபுரம் மாவட்டச் செயலாளரும், தென்மண்டல அமைப்புச் செயலாளருமான கழக முன்னோடி எஸ்.எஸ்.தென்னரசு அவரகள் கயல் தினகரனைப் பட்டை தீட்டினார். தென்னரசு அவரகளின் தோழமை, தினகரன் எழுத்துகளை மெருகேற்ற வைத்தது.

### தென்னகத் தலைவன்

தி.மு.கழகத்தில் கிடைத்த அரசியல் தோழமைகளாலும், பேரறிஞர் அண்ணா மீது

என்ற தலைப்பில் முரசொலிக்காக சேகரித்த செய்தி, முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்தது. இந்தக் கட்டுரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது. அதே போல அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, அவரது சிறப்பு குறித்து இவர் எழுதிய 'மகுடமெடுத்து தமிழன்னை சூட்டினாள்' எனும் பாடல் இசைத்தட்டாக வெளிவந்து விற்பனை ஆனது. அந்த இசைத்தட்டுக்காக தினகரனைப் பாராட்டி இருக்கிறார் அண்ணா.

### திராவிட வரலாற்றாசிரியர்

மிகச் சிறந்த பதிப்பாசிரியரான கயல் தினகரன், திராவிட இயக்கத்தின் நிகழ்ச்சிகளை, இயக்க முன்னோடிகளின் வாழ்க்கை வரலாறுகளைத் தொகுப்பு நூல்களாகக் கொண்டு வருவதில் மிகச் சிறப்பான பங்களிப்பினைச் செய்தவர். எஸ்.எஸ். தென்னரசு அவர்களின் 'பெண்ணில்லாத ஊரிலே' நினைவுக் குறிப்புகளைத் தொகுத்து வெளிக்கொண்டு வந்தது கயல் தினகரன் அவர்கள்தான். தி.மு.கழக வரலாற்றைப் பேசும் வகையில் கவனம் பெற்றவை முரசொலி சிறப்பு மலர்கள். கலைஞரின் எண்ணம் அறிந்து, அவற்றைத் தொகுப்பு களாக்குவதில் கயல் தினகரன் அவர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டவர்.

### திராவிட இயக்க தமிழர் பேரவை

"திராவிட இயக்க, தமிழர் நல சிந்தனை களோடு ஓர் இயக்கத்தைத் தொடங்க வேண் டும் என்று பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் முடிவு செய்த போது, அந்த

# கயல் தினகரன்: திராவிட எழுத்தின் கொள்கை விளக்கு!

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **கயல் தினகரன்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

எளிமையான வாழ்க்கை, உறுதியான கொள்கை , இனிமையான பேச்சு அவர்தான் கயல் தினகரன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றை முற்றிலுமாக அறிந்த முன்னோடி கழக எழுத்தாளர். பத்திரிகையாளர். கழக இலக்கிய அணியில் மாநில இணைச்செயலாளராக இருந்தவர். 2001-ஆம் ஆண்டு முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை கலைஞர் கரங்களால் பெற்ற, முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்பு. எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக கருப்பு சிவப்பே தன் வாழ்வென கொண்டிருந்த திராவிடக் கருத்தியல் ஆளுமை.

அன்றைய இராமநாதபுரம் மாவட்டம், இன்றைய சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் 1936 - ஆம் ஆண்டு மே மாதம் ஒன்றாம் தேதி பிறந்தவர். பெற்றோர் கோபாலகிருட்டிணன் - லெட்சுமிஅம்மாள். பத்தாம் வகுப்பு வரை தேவகோட்டையில் படித்தவர், திராவிட இயக்கக் கொள்கைகளில் பற்று கொண்டு தனது 15 வயதிலிருந்து அரசியல் பயிலவும், பேசவும் தொடங்கினார்.

### பெயர் மாற்றம் செய்த அழகர்சாமி

அதன் விளைவாக, 1952-ஆம் ஆண்டில் 'சூரியகாந்தி' எனும் கையெழுத்து இதழினை தொடங்கினார். பின்னர் நாடகத்தின்மீது ஈர்ப்பு கொண்டு, 'மறுமணம்' எனும் நாடகத்தை எழுதி அரங்கேற்றினார். அந்தச் சீர்திருத்த நாடகத்தில் பெண் வேடமிட்டு நடிக்கவும் செய்தார். திராவிட இயக்கப் பற்று காரணமாக, பெற்றோர் அவருக்கு வைத்த அழகர்சாமி என்கிற பெயரை, தினகரன் என்று மாற்றிக் கொண்டார்

தொடர்ச்சியாக 'கிளர்ச்சி', 'சங்கப் பலகை', 'மனிதன்', 'கலைமன்றம்', 'காதல்', 'சுதந்திரன்' ஆகிய வார இதழ்களிலும் 'தமிழ்நாடு'

கொண்டிருந்த பற்று காரணமாகவும், தனது சொந்த முயற்சியில் 'தென்னகத் தலைவன்' என்கிற வார இதழினைத் தொடங்கினார். அந்த இதழினை பேரறிஞர் அண்ணா வெளியிட்டு வாழ்த்தினார். தென்னகத் தலைவனில், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் உள்பட கழக முன்னோடிகளின் பேச்சையும் வெளியிட்டார். திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் குறித்த கட்டுரைகளையும் தொடர்ந்து எழுதி வந்தார் தினகரன். அதுபோலவே தி.மு.க தலைவர்கள், கவிஞர்களுடைய எழுத்துகளையும், தென்னகத் தலைவன் மூலம் வெளியிட்டுவந்தார்.

அந்த இதழை கழகத்தின் தொடக்க கால முன்னோடிகளில் ஒருவரான கே.ஏ. மதியழகன், கயல் தினகரனிடமிருந்து உரிமை பெற்று நடத்தினார். பின்பு அதையே, 'தென்னகம்' என்கிற பெயரில் நாளேடாக நடத்தினார்.

### முரசொலியில் அர்ப்பணிப்பு

1964-ஆம் ஆண்டு கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியில் துணை ஆசிரிய ராக இணைந்த தினகரன் அவர்கள், 'முத்தா ரம்', 'மறவன் மடல்' ஆகிய இதழ்களிலும் பணியாற்றத் தொடங்கினார். பத்தாண்டுகள் தி.மு.கழக செய்திகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் தானும் ஒருவர் என்பதை தினகரன் அவர்கள் பலமுறை வெளிப்படுத்தி இருக்கிறார்.

1967- ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சராக இருந்தபோது 'அண்ணாவுடன் ஒரு வாரம்'

> கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கலில் 'கொள்கை விளக்காக ஒளிவீசிய கயல் தினகரன்' என அவர் நினைவுகளைப் போற்றினார்.

இயக்கத்தை ஆரம்பிக்கவும் அந்த இயக்கத்திற்கு பெயர் வைக்கவும், தியாகராய நகரில் ஒரு பள்ளிக்கூடத்தில் திராவிட இயக்கச் சிந்தனை யாளர்கள் கூடிப் பேசியபோது, 'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' என்று பெயர் வைக்க வேண்டும் என்று முடிவு செய்ததில் அண்ணன் கயல் தினகரன் முக்கிய பங்காற்றினார்'' என அவருடனான அனுபவங்களைப் பதிவு செய்கிறார் கழகச் சொற்பொழிவாளர் சாவல்பூண்டி சுந்தரேசன்.

'திராவிட இயக்கத் தமிழர் பேரவை' சார்பில் திராவிடக் கொள்கைகளை, தி.மு.கவுக்கான பிரச்சாரக் கூட்டங்களில் தொடர்ச்சியாக உரையாற்றி வந்தார் தினகரன்.

முத்தமிழறிஞர் கலைஞர் மீது மாறாத விசுவாசமும், கழகத்தின் மீது தீவிரமான பற்றும் கொண்டவர். அந்த இலட்சியப் பிடிப்பையும், தி.மு.கழக வரலாற்று ஆவணத் தொகுப்புப் பணிகளையும் பாராட்டும் வகையில்தான், 2001-ஆம் ஆண்டில், கழகத்தின் கலைஞர் விருது அவருக்கு அளிக்கப்பட்டது. 2006 - 2011 ஆட்சிக்காலத்தில் சென்னை மாவட்ட நூலக ஆணை குழுத் தலைவர் பொறுப்பை, கயல் தினகரனுக்கு வழங்கி, சிறப்புற செயல்பட வைத்தார் கலைஞர்.

கழக இலக்கிய அணியின் இணைச் செயலாளராக ஓய்வறியாமல் பணியாற்றி வந்த கயல் தினகரன் அவர்கள் 2024- ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தனது 90- வது வயதில் இயற்கை எய்தினார். கழகத்தினர் திரண்டுவந்து இறுதி மரியாதை செய்ததுடன், நினைவேந்தல் நிகழ்வில் திராவிட இயக்க சிந்தனை கொண்டோர் திரண்டு வந்து, அவர் பெருமைகளைப் பறைசாற்றினர். கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கலில் 'கொள்கை விளக்காக ஒளிவீசிய கயல் தினகரன்' என அவர் நினைவுகளைப் போற்றினார். கொள்கை விளக்குகள் குன்றுவ தில்லை. இளந்தலைமுறை அணையாமல் காக்கும்.

...துடிக்கும்

## களப்பணியும்-தீர்வுக்கான பாதையும்...




சாதிய சமூக ஏற்றத் தாழ்வுகளை வீழ்த்துவதற்கான போராட்டம் நீண்ட நெடியது. சமூக நீதியை முன்னிறுத்துகிறது திராவிட இயக்கம். சமத்துவத்தை முன் வைக்கின்றன மார்க்சிய இயக்கங்கள். இந்த இலக்கில் சமகாலத்தில் களப்பணியை ஆற்றிவருகிறது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தீண்டாமை ஒழிப்பு முன்னணி. அந்த இயக்கத்தின்வழி சுமார் 30 ஆண்டுகள் களப்பணியாற்றிய பி.சம்பத், தனது அனுபவங்களைத் தொகுத்த நூல், 'சாதி ஒடுக்குமுறை எதிர்ப்புப் போராட்டங்கள் – கள அனுபவங்கள்'.

பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்த நூலில், தமிழ்நாட்டில் கடந்த 40 ஆண்டுகளில் நடைபெற்ற சாதிய மோதல்களின் பின்புலங்கள், கள நிலவரம், சாதிய மோதல்களுக்குப் பின்னரான அமைதி மற்றும் ஒற்றுமைச் செயல்பாடுகள் ஆகியவற்றை விரிவாகப் பேசி இருக்கிறார். அரசியல் இயக்கங்களின் கோரிக்கைகளுக்கு அரசு கொடுத்த கவனம், குறிப்பாக 1997-ஆம் ஆண்டு கலைஞர் அமைத்த நீதிபதி மோகன் குழு அளித்த தீர்வு ஆகியவற்றையும் இந்த நூலில் பி.சம்பத் பதிவு செய்துள்ளார். சாதிய ஒடுக்குமுறைகள் – மோதல்கள் குறைவதற்கும், தவிர்க்கப்படுவதற்கும் நடைபெற்ற களப்பணிகளை அறிந்துகொள்வதன் மூலம் தீர்வுகளுக்கான பாதையை அறிந்துகொள்ள முடியும். நூல் விலை ரூ.260.

நூல் பெற : 044-24332424 என்ற எண்ணுக்கு அழைக்கலாம்.

## ப்ளாஷ்பேக்





கி.திருநாவுக்கரசு

### மருத்துவ முகாம் தொடங்கி வைத்த தலைவர்!

2009-ஆம் ஆண்டு இன்றைய கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சராக இருந்தபோது, திருவல்லிக்கேணி தொகுதியின் 91-வது வட்டச் செயலாளராக இருந்த நான், கழகத்தின் சார்பில், மருத்துவ முகாம் ஏற்பாடு செய்தேன். தலைவர் அவர்கள் வருகை தந்து தொடங்கி வைத்தார். அன்றைய சென்னை மாநகர மேயர், இன்றைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியம், ஆயிரம்விளக்கு தொகுதியின், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், பேராசிரியர் நாகநாதன் ஆகியோர் கலந்துகொள்ள மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது.

**–கி.திருநாவுக்கரசு, பகுதி துணைச் செயலாளர், திருவல்லிக்கேணி தொகுதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞர், பேராசிரியருக்கு 3 மாத சிறை!

1962-ஆம் ஆண்டு, விலைவாசி உயர்வைக் குறைக்க வலியுறுத்தி கழகம் நடத்திய போராட்டத்தின்போது, கலைஞர், நாவலர், பேராசிரியர் ஆகியோருக்கு 3 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆலந்தூர் ஊராட்சி மன்ற உறுப்பினர் பாலுவும் மற்ற தோழர்களும் இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றனர். இரா.செழியன் திருச்சியில் மறியல் செய்து, ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.